பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 06 திங்கட்கிழமை (23-10- 995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 335

## வடக்கு - கிழக்கு நிலைமை மோசமடைந்து வருகிறது

### ஜெனிவாவில் செஞ்சிலுவை அறிக்கை

ஜெனீவா, ஒக். 23

இலங்கையின் வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து கவலை தெரிவித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஜெனீவா தலைமையகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அச்சமூட்டும் வகையில் நிலைமைகள் மோசமடைந்துள்ளன. உயிர் இழப்புகள் அதிகரிக்கின்றன. ஆயிரக்கணக்கில் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது. கொழும்பிலும், கிழக்கிலும் ஆட்கள் கைதாவது அதிகரித்துள்ளது. போர் நடக்கும் பகுதிகளில் மருத்துவ பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணத்துக்கான மருந்து இருப்பை இரட்டிப்பாக்கவும் அங்கு மேலதிக மருத்துவ ஊழியரை அனுப்பவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முடிவு செய்தபோதும் இராணுவம் அதற்கு போதுமான அளவு ஒத்துழைப்பு தரவில்லை என்றும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## மிகப்பெரிய தரை வழி தாக்குதல் ஆரம்பம்

### சரத் முனசிங்க கூறுகிறார்

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவம் நடத்தும் மிகப்பெரிய தரைவழித் தாக்குதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

சில காலத்தில் யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளிடம் இருந்து விடுவிக்கப்படும் என்றும் அவர் கூறியதாக பி.பி.ஸி. நேற்றுத் தெரிவித்தது. (இ-3)

## 13 போராளிகள் நேற்று வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 23

நீர்வேலி, மாசிவன் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் நேற்று இடம் பெற்ற உக்கிர சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 13 போராளிகள் வீரச்சாவடைந்தனர். (இ-3)

# அச்செழுவில் நடந்த மோதலில் டாங்கிகள் 3 அழிப்பு; 3 சேதம்!

## வலி. கிழக்கில் 6 ஆவது நாளாக நேற்று முழுவதும் பயங்கரச்சமர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23

அச்செழுவில் இருந்து நீர்வேலி மாசிவன் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினருடன் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய கடும் சமரின் போது படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டது. படையினரின் மூன்று டாங்கிகள் அழிக்கப்பட்டன. மற்றும் மூன்று டாங்கிகள் சேதமாக்கப்பட்டன.

கனரகவாகனங்கள், டாங்கிகள், புல்டோசர்கள் சகிதம், பீரங்கி, ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவாறு படையினர் தமது முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர். முன்னேற முயன்ற படை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயிரக் கணக்கானோர் நேற்றும் இடம்பெயர்வு

### கோப்பாய் - கைதடி பாதை போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

வலிகாமம் கிழக்கில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது இராணுவத் தரப்பில் இருந்து ஏவப்பட்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களினால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

கோப்பாய் இருபாலை, கல்வியங்காடு 3 ஆம் கட்டையடி, கட்டைப்பிராய், திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய இடங்களில் இருந்தே மக்கள் பெருமளவில் வெளியேறி இருந்தனர்.

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி சமைத்த உணவையே சாப்பிட முடியாத நிலையிலும்— அரைகுறைச் சமையல்களுடனும்—

எல்லாவற்றையும் அப்படியே விட்டு மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு ... குழந்தை குட்டிகளுடன் பலர் அவசரமாக வெளியேறி இருந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஜோர்ஜ் ஆர்னி சிகிச்சைக்காக லண்டன் பயணம்

கொழும்பு, ஒக். 23

கொலன்னாவ எண்ணெய் தாங்கி தாக்குதல் தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற சமயம் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி சிகிச்சைக்காக நேற்று பிரிட்டன் சென்றுள்ளார். (இ-3-6)

### கொழும்பில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது

கொழும்பு, ஒக். 23

கொழும்பு மாநகர சபைப் பிரதேசம், கொலன்னாவ மற்றும் களனி பிரதேச செயலர் பிரிவுகள், வெலிக்கடைப் பொலீஸ் பகுதி ஆகியவற்றில் நேற்றிரவு 8 மணி தொடக்கம் ஊரடங்கு அமுலுக்கு வந்தது. ஊரடங்கு இன்று ...

## திருநெல்வேலியில் விழுந்த ஷெல்லுக்கு பெண் பலி

### மற்றும் அறுவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 23

வலிகாமம் கிழக்கில் நேற்று நடைபெற்ற மோதலின் போது படையினர் தரப்பில் இருந்து பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவத்தில், திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் — முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கு சமீபமாக— வீடொன்றின் மீது விழுந்த ஷெல்லினால் இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார். ஆறுபேர் படுகாயமடைந்தனர். வீடும் முற்றாகச் சேதமடைந்தது.

காலை 8 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் நேற்று ஷெல் ஒருவர் படுகாயமுற்றார்

சாவகச்சேரி, ஒக். 23

படையினரால் ஏவப்பட்ட ஷெல் ஒன்று நேற்றுக் காலை 10 மணியளவில் மட்டுவிலில் வீழ்ந்து வெடித்தது.

மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் உள்ள காளி கோவில் வளவில் உள்ள தென்னைமர வட்டில் மோதி மேலேயே இது வெடித்துச் சிதறியது.

இதனால் ஷெல் சிதறல்கள் நீண்ட தூரம் பறந்து சேதம் விளைவித்தன.

ஆலய மடப்பள்ளியில் தங்கியிருந்த வேலுப்பிள்ளை இராமநாதன் (வயது 45) என்பவர் தலையில் படுகாயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இவர் அச்சுவேலி - தம்பாயிலிருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு தங்கி இருந்தவர்.

இவருடன் சுன்னாகத்திலிருந்து இடம்பெயர்ந்து கோவிலுக்கு அருகில் தங்கியிருந்த எஸ் சிவராமலிங்கம் (வயது 55) என்பவர் காலில் சிறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்கு அஞ்சி ஓடிய பலர் விபத்தில் சிக்கினர்

### சிறுவன் மரணம், சிறுமி காயம்

யாழ்ப்பாணம், ஒக். 23

ஷெல்லுக்கு அஞ்சி வெளியேறிய மக்கள், வீதிகளில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக விபத்துக்களில் சிக்கிக் கொண்டனர்.

சாவகச்சேரி பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகனவிபத்தில் அச்செழுவை சேர்ந்த சி. பத்மரூபன் (வயது 15) என்பவர் மரணமானார்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த வேளையில் இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய ராணுவ நடவடிக்கை தொடரும் என்கிறார் அனுருத்த

## சனிக்கிழமை மட்டும் 14 படையினர் பலி

கொழும்பு, ஒக். 23

யாழ். குடாநாட்டில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை திட்டமிட்ட முறையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

இப்படி பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அதேசமயம் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்த "சூரிய பிரகாஷ்" இராணுவ நடவடிக்கை இதுவரை பெருவெற்றி அளித்துள்ளது என்றும் —

அது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் — இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

படையினர் மேலும் முன்னேறிச் செல்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த மோதலில் (5 ஆவது நாள்) 14 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

2 அதிகாரிகள் உட்பட 40 படையினர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாண நகரம் விரைவில் அரச படைகளிடம் விழும்.

யாழ். நகரில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அச்செழுவில் படையினர் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

### செப்ரெம்பர் மாதத்துக்கு வழங்கப்பட்ட

# மாணவருக்கான மேலதிக உணவு முத்திரைக்கு பணம் அறவிட முடிவு

## ஓகஸ்ட் மாதம் நிறுத்தப்பட்டது பிந்தியே தெரியும்

வலி. மேற்கு, ஒக். 22

பாடசாலை மாணவர்கள் சகலருக்கும் வழங்கப்பட்ட மேலதிக உணவு முத்திரை ஓகஸ்ட் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் வறுமை நிவாரண ஆணையாளரிடமிருந்து யாழ். மாவட்ட உதவி வறுமை நிவாரண ஆணையாளருக்குக் கிடைத்துள்ளது.

ஆனால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகலருக்கும் செப்டெம்பர் மாதத்துக்குரிய மேலதிக உணவு முத்திரைக்கான பொருள்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன.

தற்போது அந்தப் பணத்தை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட உதவி வறுமை நிவாரண ஆணையாளர் திருமதி வி. கேதீஸ்வரன் சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளார்.

ஒக்ரோபர் மாதத்துக்கான வறுமை நிவாரண உணவு முத்திரை, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கூப்பன் பத்திரம் ஆகியவற்றில் இருந்து ஏற்கனவே செப்ரெம்பரில் வழங்கப்பட்ட மேலதிக உணவு முத்திரைக்குரிய பணம் அறவிடப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

வறுமை நிவாரண ஆணையாளரிடமிருந்து சுற்று நிருபம் தாமதமாக கிடைத்தமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வருமானம் கூடிய குடும்பங்களின் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக உணவு முத்திரைக்குரிய பணத்தை எந்த வகையில் அறவிடப்போகின்றார்கள் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை தென்மராட்சிப் பிரிவில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மேலதிக முத்திரைக்கு உணவுப் பொருள்கள் வழங்குவது திடீரென நிறுத்தப்பட்டதால் அதன் விபரம் தெரியாத மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு சென்று முறையிட்டனர்.

(ஓ-175-117)

### குறைநிரப்பு பிரேரணை மூலம்

# பாதுகாப்புச் செலவுக்கு மேலும் ரூ. 860 கோடி!!

கொழும்பு, ஒக். 23

பாதுகாப்புச் செலவினங்களுக்கென மேலும் 860 கோடி ரூபா, குறை நிரப்புப் பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான 4 குறை நிரப்புப் பிரேரணைகளை பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இராணுவம், விமானப்படை, கடற்படை, தேசிய சிவில் பாதுகாப்பு ஆகிய பாதுகாப்புத் துறைகளுக்கென தனித்தனியான இந்த பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரேரணைகளை சமர்ப்பித்து உரையாற்றிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் —

இந்த யுத்தம் பயங்கரவாதத்திற்கு எதிரானதே அன்றி தமிழருக்கு எதிரானது அல்ல எனத் தெரிவித்தார்.

(ஓ-எ-3)

# பெரும் நிதி நெருக்கடியில் ஐ. நா. சபை நிர்வாகம்

நியூயோர்க், ஒக். 23

ஐக்கிய நாடுகள் சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி தலைமை அலுவலகமும் அது அமைந்துள்ள நியூயோர்க் நகரமும் பெரும் விழாக்கோலம் பூண்டுள்ள இந்த நிலையில் —

என்றும் இல்லாதவாறு ஐ. நா. சபை நிர்வாகம், நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அங்கத்துவ நாடுகளிடம் இருந்து கிடைக்க வேண்டிய சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் இன்னமும் வந்து சேராததை அடுத்தே ஐ. நா. சபை நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-எ)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இன்று நடைபெறவிருந்த மரியாயின் சேனையாருக்கான ஞானவொடுக்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது

(இ-3)

# அதிபர் சீனித்தம்பி காலமானார்

வடமராட்சி, ஒக். 23

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும், வதிரி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறுவனருமான திரு. எம். எஸ். சீனித்தம்பி அண்மையில் காலமானார்.

சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட இவர் தான்பெற்ற கல்வியினூடாக தனது சமூகம் வளர்ச்சியடைய அரும்பாடுபட்டவர்.

26 வருடங்கள் தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி பாடசாலை முகாமைத்துவ திறனை வெளிக்காட்டிப் பாராட்டுப் பெற்றிருந்தார்.

தமது மக்களின் சமூக, பொருளாதார விடிவுக்காக தன்னை அர்ப்பணித்ததன் காரணமாக இங்கிலாந்திலுள்ள கேம்பிறிஜ் சர்வதேச சுயசரிதையியல் நிறுவனம் "சாதனை மனிதன்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் அமெரிக்க சர்வதேச விசேட தலைமைத்துவத்திற்கான விருதும் 1981ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

முன்னாள் யா/சன்மார்க்க மகா வித்தியாலய அதிபரும், தற்போது வேலணைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராகவிருந்து
21 — 10 — 1995 இல் ஓய்வு பெற்ற
உயர்திரு சின்னப்பு நடேசபிள்ளையை
வாழ்த்துகிறோம்

சன்மார்க்கம் வாழ
சேவை பல புரிந்தவரே!
பிறர் மனம் நோவதைப்
பார்க்கப் பொறுக்காதவரே!
சாந்தம் சமாதானத்திற்கு
உறைவிடமானவரே!
சமய நெறி ஓங்க
உழைத்தவரே! நீவிர்
வாழ்க, வாழ்க, வாழ்க!

அதிபர், அசிரியர்கள், மாணவர்கள்,
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
(39112)

41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 1978
உதிர்வு: 13 - 09 - 1995

செல்வி
சதாநந்தினி சண்முகலிங்கம்

கடந்த 13 - 09 - 1995 அன்று வஞ்சகர்களின் சதிக்கு ஆளாகி எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது மருமகளின் 41 ஆம் நாள் புண்ணியதான நிகழ்ச்சியில் இன்று (23 - 10 - 1995) எமதில்லத்தில் (ஆரையம்பதி - 3, மட்டக்களப்பு) கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா, அம்மம்மா,
சகோதரம், மாமா, அன்ரி, சித்தி
கமலகிரி,
ஆரையம்பதி- 3
மட்டக்களப்பு.

அப்பம்மா, அன்ரி, வவாசித்தி,
நாகராசா குடும்பம்,
சுப்பிரமணியம் குடும்பம் [கனடா],
சுதுமலை வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: மோகன் மாமா (39116)

ஈராண்டு நினைவுகளில்



அன்னை மடியில்: 26 — 07 — 1946
அரக்கர் அழிப்பில்: 12 — 11 — 1993

அமரர்
கணபதிப்பிள்ளை கமலானந்தன்
[ஓய்வு பெற்ற புகையிரதப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்]
திதி 23-10-1995

இரண்டு ஆண்டுகளா? அப்பா என நாம் அழைத்து
இழந்து விட்ட பாவிகள் நாம் - எம்
இதயத்தின் வேதனையை என்ன செய்ய?
இறைவனிற்கு ஏனிந்தப் பாதக வேலை?
அன்பான, ஆற்றலுள்ள, இனிமையான, ஈகை
மிக்க, உன்னதமான, ஊக்கமுள்ள எங்கள்
அப்பாவை ஏன் பறித்தான்? அன்று
நிழல் அற்ற தனிராகக் கருகியதே எம் இதயம்,
எழல் போற்றி வாழ்வோமே - என்றும்
கண்ணியமாய் உம் வழியில் நாமும்.

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
58, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(39115)

யாழ். மரியாயின் சேனையாரின்
ஞானொடுக்கம்
பிற்போடப்பட்டுள்ளது

இன்று (23- 10- 95) திங்கள் நடைபெறவிருந்த மரியாயின் சேனையாளருக்கான ஞானொடுக்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

M. A. பிரகாசராசா
யாழ். கொமிற்சியத் தலைவர்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(39117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீட்டக ஆதரவில்

யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தும்

# போலியோ விழிப்புணர்வு ஓவியப் போட்டி

★ போலியோ (இளம்பிள்ளைவாதம்) நோயின் ஆபத்துகள்.
★ சமூகத்தின் பல மட்டத்தினரிடையே போலியோ நோய் ஏற்படுத்தி உள்ள பாதிப்புகள்.
★ தேசிய நோய்த் தடுப்புத் தினங்களை மக்களிடையே பிரபல்யப்படுத்தல்.
★ இந்நோயின் பாதிப்புக்குள்ளானவருக்கான மறு வாழ்வுத் திட்டங்கள்.
★ 2,000 ஆண்டளவில் போலியோ நோய் அற்ற உலகை உருவாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்.

இவற்றில் ஒன்றைச் சித்திரித்துக் காட்டுவதாக ஓவியங்கள் அமைய வேண்டும்.

போட்டி பாடசாலை மாணவருக்கும், தனிப்பட்டவர்களுக்குமாக இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

பாடசாலை மாணவருக்கான போட்டிக்கு வகுப்பு, வயதுக் கட்டுப்பாடு இல்லை.

அதிக எண்ணிக்கையான மாணவர்களை போட்டியில் ஈடுபடுத்தும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் உண்டு.

தனிப்பட்டவர்களுக்கான போட்டிக்கும் வயதுக் கட்டுப்பாடு இல்லை.

போட்டிக்கான ஓவியங்களை செயலாளர், யாழ். மிட்-ரவுண்றோற்றறக்ற் கழகம், 83, கோவில் வீதி, நல்லூர் என்ற விலாசத்துக்கு அனுப்பவும். நேரிலும் கையளிக்கலாம்.

ஓவியங்கள் யாவும் 19''X24'' அளவுடைய ''பிறிஸ்ரல் போர்ட்'' அட்டைத் தாளில் வரையப்பட வேண்டும்.

எந்த வர்ணத்தையும் பயன்படுத்தலாம்.

## பரிசு விவரம்

பாடசாலை மாணவர்களுக்கு

1ஆம் பரிசு — ரூபா 1,000/-
2ஆம் பரிசு — ரூபா 750/-
3ஆம் பரிசு — ரூபா 500/-

தனிப்பட்டவர்களுக்கு

1ஆம் பரிசு — ரூபா 1,500/-
2ஆம் பரிசு — ரூபா 1,000
3ஆம் பரிசு — ரூபா 600/-

சிறந்த ஓவியங்களுக்கு ஆறுதல் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஓவியங்களுடன் கீழே உள்ள விண்ணப்பப்படிவமும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**முடிவு திகதி: 31-10-1995**

உதயன் வெளியீட்டக பணியாளர்களும், யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழக உறுப்பினர்களும் போட்டியில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

போட்டிக் குழுவின் தீர்ப்பே சகல விடயங்களிலும் இறுதியானது.

## விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்: ..........................................
விலாசம்; ..........................................
..........................................
பிறந்த திகதி; ..........................................
பால் / வயது; ..........................................

பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம்

பாடசாலை; ..........................................
ஆண்டு; ..........................................

..........................................
மாணவர் கையொப்பம்

இம் மாணவர் எனது பாடசாலையில் மேற்படி வகுப்பில் கல்வி கற்று வருகின்றார் என்பதையும் இந்த ஓவியம் அவரது சொந்தப் படைப்பு என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்,

.......................... ..........................
திகதி அதிபரின் கையொப்பம்

தனிப்பட்ட போட்டியாளர்களுக்கு மாத்திரம்

போட்டி விதிமுறைகளுக்கு இணங்கி வரையப்பட்ட இவ் ஓவியம் எனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.......................... ..........................
திகதி போட்டியாளரின் கையொப்பம்

ROTARACT CLUB

# பல்லாயிரக்கணக்கில் பொது மக்கள் தொடர்ந்து இடம்பெயர்கின்றனர்!

## தெருத் தெருவாக அவலக் காட்சிகள்

பெரும் போர்க்களமாக மாறிவரும் வலி-கிழக்கின் பெரும் பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றனர்.

படையினரின் அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் குடியிருப்புகள் மீது கண்டபடி நடத்தப்படுவதால் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சி மற்றும் வடமராட்சி பகுதிகளை நோக்கிச் சென்ற வண்ணம் உள்ளனர்.

யாழ். நகரை அண்டிய பகுதிகளை நோக்கியும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

பொதிகளைச் சுமந்தபடி வீதிகளில் எங்கும் மக்கள் கூட்டங்களைக் காணமுடிகிறது.

எங்கே சென்று தங்குவது என்று தெரியாத நிலையில் வீதியோரங்களிலும் பல குடும்பங்கள் தங்கியுள்ளன.

பல இடங்களில் கோவில்கள், பாடசாலைகளிலும் மக்கள் தங்கியுள்ளனர்.

தென்மராட்சி நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டத்தை கண்டி வீதி எங்கும் "காண முடிகிறது.

சிறுவர்கள், பெண்கள் வயோதிபர்கள்கூடகால்நடையாகப் பொருள்களைச் சுமந்தபடி செல்கின்றனர்.

பலர் லண்டிகள், லாண்ட் மாஸ்ரர்கள் என்பவற்றில் குடும்பம் குடும்பமாகச் செல்கின்றனர்.

இடம்பெயரும் மக்களில் பலர் உடனடி உதவிகள் கிடைக்காத நிலையில் அவலப்படுகின்றனர்.

சுமார் 3 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஆரம்ப மதிப்பீடுகளில் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த எண்ணிக்கை மேலும் பல மடங்கு அதிகரித்து வருகிறது

இடம்பெயர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் தங்கியிருக்கும் தென்மராட்சிப் பகுதியில் சன நெருக்கடி நிலை காணப்படுகிறது.

இடம் பெயர்ந்து அவலப்படும் மக்களை தற்போது பெய்யும் மழை மேலும் பாதித்துள்ளது. (ஐ)

தலைநகரில் அனர்த்தம் ஏற்பட்டவேளை

# ஜனாதிபதி வெளிநாடு சென்றது பொறுப்பற்ற செயல் என்கிறார் ரணில்

கொழும்பு, ஒக். 23

தனது நாட்டின் தலைநகரில் பெரும் தீ அனர்த்தம் ஏற்பட்டது தெரிந்த பின்பும் நாட்டின் தலைவர் ஒருவர் வெளிநாடு சென்றது பொறுப்பற்ற செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டை விடவும் இன்றைய இலங்கை நிலவரம் முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடந்த தாக்குதல்களில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவோரை ரணில் விக்கிரமசிங்கா நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை—

கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சியங்கள் தாக்கப்பட்டது குறித்து அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னரே தமக்குத் தகவல் கிடைத்ததாகவும்—

ஆயினும் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட அந்த விஜயத்தை கடைசி நேரத்தில் ரத்துச் செய்யத் தம்மால் முடியாது போனதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியுயோர்க்கில் இருந்து வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சகல நடவடிக்கையும் எடுக்குமாறு அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவரையும் தாம் பணித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-எ-6)

# அடுத்த ஆண்டில் விடுமுறை தினங்கள்

1996ஆம் ஆண்டில் தமிழீழப் பொது விடுமுறை தினங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நாள்களை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

நாட்காட்டிகளை அச்சிடும் சகலரும் இவற்றைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:

★ தைப்பொங்கல்— 15-01-1996 திங்கள்.
★ மகாசிவராத்திரி— 17-02-96 சனி.
★ ரம்ழான்— 21-02-1996 புதன்
★ பெரியவெள்ளி — 05-04-1996 வெள்ளி.
★ சித்திரைப் புத்தாண்டு— 13-04-1996 சனி.
★ அன்னை பூபதி நினைவு நாள் —19-04-1996 வெள்ளி.
★ ஹஜ் பெருநாள்— 29-04-1996 திங்கள்.
★ மே நாள்— 01-05-1996 புதன்.
★ சித்திரா பௌர்ணமி — 03-05-1996 வெள்ளி.
★ சிறப்பு வைப்பக விடுமுறை — 30-06-1996 ஞாயிறு
★ கரும்புலிகள் நாள் — 05-07-1996 வெள்ளி.
★ ஆடி அமாவாசை — 13-08-1796 செவ்வாய்.
★ தியாகி திலீபன் நினைவு நாள் — 26-09-1996 வியாழன்
★ மாலதி நினைவு நாளும் தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமும் — 10 - 10 - 1996 வியாழன்.
★ தீபாவளி— 10-11-1996 ஞாயிறு.
★ மாவீரர் நாள் — 27-11-1996 புதன்.
★ நத்தார் — 25-12-1996 புதன்.
★ சிறப்பு வைப்பக விடுமுறை — 31-12-1996 செவ்வாய். (ஐ)

## பருத்தித்துறையில் நாளை நிதி சேகரிப்பு

பருத்தித்துறை (ஜே —401) பருத்தித்துறை தெற்கு (ஜே 402) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நாளை செவ்வாய்க்கிழமை மாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும்.

இப்பகுதிகளைச் சேர்ந்தோர் ஹாட்லிக் கல்லூரியில் பிற்பகல் 3 மணி முதல் [illegible] வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## மெய்கண்டதேவர் நினைவு தினம்

தென்மராட்சி, ஒக் 23

சாவகச்சேரி சைவ சித்தாந்தக் கழகத்தினர் நடத்தும் சந்தான குரவர் மெய்கண்டதேவர் நினைவு தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3-00 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி, சந்தானமுதலிச்சி புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் இளைப்பாறிய அதிபர் திரு ஆ. நடராசா தலைமையில் நடைபெறும்.

''அருள் திரு மெய்கண்டதேவர் மகிமை'' என்னும் பொருளில் மெய்கண்டார் நெறி சஞ்சிகை ஆசிரியர் ம. சி. சிதம்பரப்பிள்ளையும், ''சிவஞானபோதம்'' என்னும் பொருளில் பண்டிதர் க. சங்கரப்பிள்ளையும் சிறப்புச் சொற்பொழிவுகளை நடத்துவர். (ஓ-117)

# நாளை சூரிய கிரகணம்; குடாநாட்டிலும் தென்படும்

நாளை செவ்வாய் கிழமை பூரண சூரிய கிரகணம் நிகழவுள்ளது.

காலை 7 45 மணிமுதல் 9 59 மணிவரை பூரண சூரிய கிரகணம் நிகழும். கிரகணத்தின் உச்சநிலை காலை 8.47 மணிக்கு நிகழும் என்று தெரிவிக்கப்படுகிறது

அனுராதபுரம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் சூரிய கிரகணத்தின் அரைவாசிப் பகுதி தென்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த அரிய நிகழ்வை படம் எடுக்கவும், வேறு பல ஆய்வுகளைச் செய்யவும் இந்திய விஞ்ஞானிகள் சகல முன்னேற்பாடுகளுடனும் தயாராக உள்ளனர்

சூரிய கிரகணத்தை நேரடியாக எவரும் பார்க்கக் கூடாது கறுப்பு நிறக் கண்ணாடி மூலம் அல்லது கண்ணாடித் துண்டு ஒன்றை விளக்கின் புகையில் பிடித்து கறுப்பு நிறமாக்கி அதனூடாகப் பார்க்கலாம்.

கிரகணம் நிகழ்வதை ''தூரதர்ஷன்'' தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்ப உள்ளது.

சூரிய கிரகணத்தை ஒட்டி தமிழக அரசு நாளைய தினத்தை விடுமுறை நாளாக அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

23 - 10 - 1995




தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

★ 22கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

★ பழைய நகைகள் நியாயமான விலைக்கு வாங்கப்படும்.

**அருள்முருகன் நகை அகம்**

இல. 96/1. சந்தோசம் தெரு.
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:

**சிவா நகை மாடம்**

யாழ். வீதி, சாவகச்சேரி.



வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

**சிறிபிரியா நகைப் பூங்கா**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**சிறிபிரியா நகைப் பூங்கா**

214, சந்தோசம் தெரு (கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.



★ தரமான சிற்றுண்டி வகைகள்

★ தரமான சுவையான ஐஸ்கிறீம்

★ குளிர்பான வகைகள்

★ மற்றும் வைபவங்களுக்கு ஏற்ற உணவு வகைகள் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும்

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்தவர்கள்

**கல்யாணி குளிரகம்**

(கல்யாணி கிறீம் கவுஸ்)

இல. 73, சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.


## அல்லற்படும் மக்கள் துயர் போக்கி அதில் இறைவனைக் காண்போம்!

தீப, ஆவளி என்ற இரு சொற்கள் சேர்ந்து தீபாவளி ஆயிற்று. தீபங்களின் வரிசை என இது பொருள்படும். தீபத்திருநாள் இதுவாகும். இத்தினத்தில் இல்லத்தரசிகள் வீடுகள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபாடாற்றுவார்கள்.

தீப மங்கள சோதி, நமோ! நமோ! என தீபத்திற்கு வந்தனை புரிவார்கள். திருவிளக்குப் பூசை மனை நலம் விளங்க மாதர் புரியும் வழிபாடாகும். வருடம் ஒரு முறை வரும் இத்தீபத் திருநாள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நன்னாள். இருளை அகற்றி ஒளியைப் பெருக்கும் திருநாள்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது அது இருளை அகற்றி ஒளியை ஏற்படுத்துவது. இதன் உட்பொருள். மனத்தின் இருளை அகற்றி ஒளியைப் பெருக்க வேண்டும் என்பதேயாகும். மனத்தில் ஏற்படும் ஒளியை அறிவு, ஞானம் எனலாம்.

அகிலத்தில் ஏற்படும் துன்பங்களுக்கு அடித்தளமாக அமைவது மக்களின் அறியாமையே ஆகும். அதனாலேயே அறியாமையை அகற்றி அறிவினை வளர்ப்பதற்கு மக்கள் அரும்பாடுபடுகின்றனர்.

அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் இவற்றை அகற்றி அறிவொளியை ஏற்படுத்தினால் அகிலம் அமைதியுறும்; அதிக நன்மை பெறும்.

அறிவுக்கு மேம்பட்ட நிலையான அருள், எல்லோரிடமும் அன்பு காட்டும் தன்மை — ஒருவரை ஆத்மபலம் உடையவராகவும், சற்குருவாகவும் ஆக்கி விடுகிறது.

இறைவன் சோதிமயமானவன். இதனை நமது அருளாளர்கள் உறுதிபடக் கூறிப் போந்துள்ளனர். பிரியும் உயிர் இறைவனோ. இணைதல் சோதியுட் கலத்தல் எனக்கூறப்படுகிறது. ஆதி அந்தமில்லாத சோதியை ஒரு உணர்ந்து நன்மையடைவது நம்கடன்.

தீபாவளி பற்றிய புராணக் கதை ஒன்றுள்ளது.

நரகாசுரன் என்ற துட்டன் மகா பராக்கிரமசாலி, எனவே அவன் இறுமாப்புக் கொண்டான் நல்லவர்களை வருத்தினான்

நல்லவர்கள் இறைவனிடம் முறையிட்டனர்.

அவர்களின் முறையீட்டைக் கருத்திற் கொண்ட இறைவன் காத்தற் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியாகத் தோன்றி அரசுரனைக் கொன்றார்.

இறக்கும் தறுவாயில் அவன் ஒரு வரம் வேண்டினான்.

நான் இறக்கும் இத்தினத்தில் என்னை அர்ச்சித்து வழிபடுவோருக்கு கருணை வழங்க வேண்டும் என்பதே அவ்வரமாகும்.

அவன் கேட்ட வரம் வழங்கப்பட்டது.

அன்று தொடக்கம் தீபாவளியும் கொண்டாடப்படுகிறது.

இறைவன் துட்டர்களை அழித்து அடியார்களைப் பேணுவான் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

கெட்டவர்களும் நினைவு கூரப்படுவதற்கு இவ்விழா ஓர் உதாரணம்.

புதிதுடுத்தி புனிதனை வணங்கும் நாளாக இத்தினம் அமைய வேண்டுமேயன்றி உயிர் கொலை செய்து உயிர் குடிக்கும் மது வருந்தும் நாளாக இதுமாறி, புனிதத் தன்மையைக் கெடுக்க

[5 ஆம் பக்கம் பார்க்க]

### எந்நாளில்?

தீபங்கள் ஏற்றியும்
தீயவை அழிந்ததும் இந்நாளில் - எமது
தீமைகள் அழிவதும்
திருப்தி அடைவதும், எந்நாளில்?
தாழ்வு போனதும்,
தர்மம் பிறந்ததும், இந்நாளில் - எங்கள்
வாழ்வு மலர்வதும்,
வளமை பெறுவதும், எந்நாளில்?
அரக்கர்கள் அழிந்ததும்;
அதர்மங்கள் ஒழிந்ததும், இந்நாளில் - எங்கள்
அரசு பிறப்பதும்,
ஆட்சி அமைப்பதும் எந்நாளில்?

வண்ணை சே. சிவராசா.


நரகாசுர வதையால் அராஜகம்
அழிக்கப்பட்ட

**தீபாவளி நல்வாழ்த்து**
**உரியதாகுக**

உங்கள் புடைவைத் தேவைகளுக்கு
நாட வேண்டியது!

**ச. லிங்கநாதன்**

**வண்ணச்சோலை**

13, 14, மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள். அன்பர்கள்,
நண்பர்கள், அனவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும்

விரும்பிய டிசைன்களில்
நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ளவும்
நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**ஸ்ரீவாணி ஜுவல்லேர்ஸ்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இதயம் குளிர்ந்திடும் இன்ப நாளிதில் குளிர் தென்றலாய் குடும்பங்கள் குதூகலிக்க

**தீபாவளி வாழ்த்துக்கள்**

★ அறுசுவை உண்டிகள் ★ குளிர்பான வகைகளுக்கு

**லிங்கம் கூல் பார்**

வெலிங்டன் சந்தி, 52, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

**23 – 10 – 1995**


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் தித்திக்கும்

**தீபாவளி வாழ்த்துக்கள்!**

★ மங்கள நிகழ்வுகளை அதி நவீன தொழில் நுட்பக் கருவிகள் மூலம் வீடியோ படம் பிடித்திடவும், புகைப் படம் பிடித்திடவும்.
★ சகல விதமான கடிகாரங்களையும் உத்தரவாதத்துடன் வாங்கிக் கொள்ளவும், திருத்திக்கொள்ளவும்,
★ றேடியோ, ரி. வி. வீடியோக் கமராக்கள் கமராக்கள் முதலியவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்ளவும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரேயிடம்;

**ஞானம் அன் கோ,**
இல. 21A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
எல்லோருக்கும் தித்திக்கும்

**தீபாவளி வாழ்த்துக்கள்**
**உரித்தாகுக!**

**ஞானம் ஆடையகம்,**
54, மேஜர் சோதியா தெரு (பெரிய கடை),
யாழ்ப்பாணம்.

**ஞானம்**
**விற்பனைக் கூடம்,**
66, சந்தோசம் (கஸ்தூரியார்) தெரு,
யாழ்ப்பாணம்.



வாடிககையாளர்கள், தொழிலாளர்கள்
மற்றும் விநியோகத்தர்கள் அனைவருக்கும்

**தீபநன்னாள் சிறப்புற**
**★ வாழ்த்துகிறோம் ★**

**ஆர். வி. ஜி. பீடி**
**ஸ்தாபனம்**
58, குறுக்கு வீதி, நல்லூர்.
கிளை:
**வ.இ.வ. (R. V. G.) மருந்தகம்**
504, லெப். கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.


## கயவரை அழித்து விடு!

எண்ணத் தொலைபரத்-
துயரங்கள்
எத்தனை பெத்தனை-
பேரீடிகள்
மண்ணில் எம்மை-
வலித்திழுக்கும்
வகைவகையான-
மரணங்கள்
கண்ணா! இவற்றைக்-
காட்டியெமைக்
கடிந்து நிற்கும்-
கயவர்களைத்
திண்ண மாய்நீ அழித்துவிடு
தீபா வளிகள்-
தொடரட்டும்

— பொன் கொடுதீவான்.

## அசுரத்தனம் ஆகாதே!

விண்ணில் பறந்தே –
அசுரர்கள்
வீம்பு செய்து –
மகிழ்ந்தனரே
மண்ணில் கொடுமை –
புரிந்தே
மழலைகள் மக்களை –
அழித்தனரே
எண்ணெய் குதங்கள் –
எரிகிறதே
எங்கள் சாபம் –
பலித்ததுவே
அண்ணே! அசுரத்தனம்-
ஆகாதே
கண்ணன் புகட்டிய –
பாடமதே!

– காரை. எம். பி.
அருளானந்தன்.

## அல்லற்படும். ..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கூடாது
கொண்டாட்டங்களைச் சுருக்கி, இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடப்பெயர்ந்தோர் முகாம்களில் திண்டாட்ட முறும் மக்களுக்கு அப்பணத்தை வழங்கினால் அவர்கள் உண்டு உயிர் வாழ்வர்.
அடுத்தவன் பசியின்றி வாடிக் காண்பதும் கடவுளைக் கண்டதற்கு நிகரானதாகும்.
அல்லலுறும் மக்கள் துயர் போக்கி அதில் இறைவனைக் காண விளைவோம்.
குடாநாட்டினுள் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிர்க்கதியாகியுள்ள நிலையில் இதனை மட்டுமே நாம் நினைவில் கொள்ள முடியும்.


**தீபத்திருநாள்**
**★ நல்வாழ்த்துக்கள் ★**
உங்கள் சகல பொருள் தேவைகளையும்
பூர்த்தி செய்கிறோம்.

**ராஜா ஸ்ரோர்ஸ்**
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



தீபாவளி திருநாளைக் கொண்டாடும்
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
**எமது வாழ்த்துக்கள்**

★ சன்மார்க்க நூல்கள், ★ சோக்ஸ் நூல்கள்
★ பிறசியர்ஸ், ★ பெனியன் வகைகள்
பாவற்றிற்கும்

**சிறி முருகன்**
303, காங்கேசன் துறை சாலை,
யாழ்ப்பாணம்.



**C. C. C**
**CITY CLINICAL CONSULTATION**
எமது உளம் கனிந்த இனிய
**தீபாவளி வாழ்த்துக்கள்!**
கண் மற்றும் வைத்திய நிபுணர்
ஆலோசனைகளுக்கு தனித்துவமான
சிறந்த நிறுவனம்

**C. C. C. கிளினிக்,**
சுபாஸ் இல்லம்,
இல. 37, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.



பெருவாழ்வு பெற்று செழிப்புடனே இனிது வாழ
எம் இதயம் கனிந்த
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

திருமண கூறைச் சேலைகள்

★ காஞ்சிபுரம், ★ மைசூர்சில்க்
★ பெங்களூர்சில்க், ★ பட்டு வேட்டிகளுக்கு

கைராசியான ஒரே ஸ்தாபனம்

**திருமாட்டி**
**புடைவைக் கடல்**
**(சீ. மாட்டி)**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



அனைவர் வாழ்விலும் ஒளி மிளிர, இருள் அகல
★ எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள் ★

விழி
உங்களிடம்
அதன்
ஒளி
எங்களிடம்



சகல வித மூக்குக் கண்ணாடிகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்;

**★ எரிக் கணேஷ் ★**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



அனைத்து தமிழீழ மக்களுக்கும்
**எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!**

✶ அன்பளிப்பு
✶ அழகு சாதன விளையாட்டு பொருள்கள்
மற்றும்
✶ மணிக்கூடுகள் ✶ றேடியோக்கள்
✶ தோல் பைகள் (பாக்ஸ்) வகைகளை
நிதான விலையில் கொள்வனவு செய்ய
எம்மை நாடுங்கள்!

**கணேசா வர்த்தக நிலையம்**
65, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: கி இராசதுரை எச்சாட்டி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (39093)

### மணப்பெண் தேவை

சவூதியிலிருந்து வந்துள்ள பல் குறைபாடுள்ள பிரமச்சாரிக்கு உறவினரின்றி தனிப்பட ஏற்று திருமணப்பதிவு செய்யக்கூடிய அழகிய மணமகள் 37 வயதுக்குள் தேவை. தொழிலுள்ளவர் விரும்பத்தக்கது. ஜாதகம் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 979, மே/பா உதயன். (8664)

### மலிவு விற்பனை

நல்ல இனப்பன்றிக் குட்டிகளும், இறைச்சிக்குரிய பன்றிகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். செவ்விளநீர் நாற்றும் விற்பனைக்குண்டு அண்ணாவாம். இணுவில். (சி-2527)

## இசைத்திறன் போட்டி

யாழ் வை. எம். சி. ஏ. யால் நடத்தப்படும் வருடாந்த இசைத்திறன் இறுதிப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு ஜெகன் வைகோதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (எ)

## ரீ.டீ.எம். பசளை எடுத்து வர அனுமதி?

வடபகுதிக்கு ரீ. டீ. எம். பசளையை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அதே சமயம் பீ - 1 பசளையை எடுத்துச் செல்ல இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் —

அது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

---

ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் வண்ணை

ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மடப்பள்ளி ஐயர் தேவை

தேவஸ்தானத்திற்கு மாத சம்பள அடிப்படையில் தினசரி பூசைக்கும், உற்சவங்களுக்கும் உரிய பிரசாதங்களை தயாரிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த மடப்பள்ளி ஐயர் ஒருவர் தேவை. 30-10-95 திகதி வரையும் தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
மேற்படி ஆதீன மகாசபை

யாழ்ப்பாணம். (39111)

---

★ றபர் சீல்கள் ★ பிளாஸ்ரிக் பெயர்
★ வாகன இலக்கம் ★ விளம்பர ஓவியம்

யாவும் ஒரு வருட உத்தரவாதத்துடன் செய்து கொள்ள நாடுங்கள்

## "வீமா"

272 A நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(தனியார் வைத்தியசாலை முன்பாக)

(39072)

---

## அறிவித்தல்

## வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வு - 1996

மேற்படி சபையின் தேர்வுக்கான, விண்ணப்பப் படிவங்களும் அறிவுறுத்தல்களும் சபைப்பணிமனையில். காரியாலய நேரத்தில் 1995 - 11 - 01 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகளின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 1996 - 01 - 19 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும். 1996 - 01 - 19 க்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### தேர்வுக் கட்டண விகிதம்:

| | |
|---|---|
| தரம்: ஒன்று | ரூபா. 50/- |
| தரம்: இரண்டு | ரூபா: 75/- |
| தரம்: மூன்று | ரூபா: 100/- |
| தரம்: நான்கு | ரூபா; 125/- |
| தரம்: ஐந்து | ரூபா; 200/- |
| தரம்: ஆறு | ரூபா: 250/- |

விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா: 10/- (பத்து) மட்டும்.

மேலதிக விவரங்களுக்கு அறிவுறுத்தலைப் பார்க்கவும்.

இ. சிவானந்தன்.
கல்விப்பணிப்பாளரும் (வலயம் - 01)
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

(சி-2516)

---

யாழ். ஆஸ்பத்திரியில்

## டாக்டர்கள் பருகும் நீரில் கழிவு நீர் கலக்கின்றதா?

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் தங்கும் விடுதிக்கு நாளாந்த பாவனைக்காக விநியோகிக்கப்படும் நீரில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியான தாங்கி ஒன்றின் மூலம் வழங்கப்படும் இந்த நீருடன் கழிவுநீர் கலப்பதினாலேயே இத் துர்நாற்றம் வீசுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீரில் துர்நாற்றம் வீசுவதாக டாக்டர்கள் தெரிவித்ததை அடுத்து நீர்த் தாங்கியும் அதற்கு நீர் நிரப்பும் கிணறும் சுத்திகரிக்கப்பட்டன.

ஆனால் அவை சுத்திகரிக்கப்பட்ட பிறகும் நீரில் துர்நாற்றம் வீசுவதாக விடுதி டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே டாக்டர்களின் விடுதிக்கான நீர் விநியோகக் குழாயில் எங்கோ வெடிப்பு ஏற்பட்டு கழிவு நீர் அதனுடன் சேர்வதாகச் சந்தேகிக்கப்படுகிறது (ஐ)

## வெளிநாட்டு பத்திரிகையிலும் முக்கியத்துவம்

புதுடில்லி, ஒக். 22

கொலன்னாவ எண்ணெய்க் குதங்கள் மீதான தாக்குதல் சம்பவம் உள்நாட்டுப் பத்திரிகைகளில் மட்டுமன்றி, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

இந்தியாவில் இருந்து வெளியான தேசிய நாளிதழ்கள் அனைத்திலும் இச் சம்பவமே தலைப்புச் செய்தியாக இடம் பெற்றிருந்தது. (ஒ-எ)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 07 — 1930

உதிர்வு: 02 — 11 — 1994

### திரு. வ. அப்புத்துரை

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)
அம்பனை தெல்லிப்பளை

திதி: 23 - 10 - 1995

அன்பும், பண்பும் அறிவும், துணிவும் கொண்டு
எம்மை வழிநடத்திய அப்பா
பலரும் போற்றும்படி பாரினில் வாழ்ந்த
எங்கள் பாசத்தின் இருப்பிடமே!
ஓர் ஆண்டு சென்றாலும் - அப்பா
என்றும் எங்கள் உள்ளத்தில் நிறைந்திருப்பீர்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள், மருமக்கள்.

பூமணி லேன்,
மருதனார்மடம். (39102)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் (1995 - 10 - 25) புதன்கிழமை காலை 9 - 53 முதல் 10 - 29 வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்தத்தில்

| எங்கள் சிரேஷ்ட புத்திரன் | எங்கள் ஏக புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| Dr. கேசவன் | வைதேகி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் திருமணம் நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| க. இரத்தினசபாபதிப்பிள்ளை, | க. கதிர்காமத்தம்பி |
| அழகாபுரி, | விவசாய பாடசாலை முன்பாக, |
| கோப்பாய். | திருநெல்வேலி |

வரவேற்புபசாரம்:

26 - 10 - 1995 வியாழன் பிற்பகல் 4-00 மணி மணமகன் இல்லம்.

(சி-39110)

---

## 60 th BIRTHDAY

23 - 10 - 1995



Born: 23 — 10 — 1935

Rest in Peace: 28 — 06 — 1995

### SWAMINATHAN BALACHANDRAN

"If for Christ I proclaim the glad story,
If I seek for His sheep gone astray;
I am sure He will show me His glory,
When I 've walked the last mile of my way"

Fondly remembered and sadly missed on his 60 th Birthday by his dearest Wife

Grace & ever loving friends

(39103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## அணி சேர்வீர்!

குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றி விடுவது என்பதில் சிங்கள அரசு உறுதியாகவே உள்ளது —

வாழ்வா சாவா என்றொரு நெருக்கடி நிலையே இன்று எம்முன் உள்ளது —

போராடினால் வாழ்வு, பயந்தோடினால் சாவு என்ற நிலையே உள்ளது —

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் மிகக்கவனமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

இந்த இன அழிப்பைத் தடுப்பதற்கு வெளியார் எவரும் எமக்கு உதவப் போவதில்லை. இனப் படுகொலையை நிறுத்தி போரை நிறுத்துமாறு எவரும் ஸ்ரீலங்கா அரசு மீது அழுத்தம் போடப் போவதில்லை. பலஸ்தீனத்திலும், கிழக்குத் திமோரிலும் நடந்த இனப் படுகொலைகளை சர்வதேச சமூகம் தடுத்ததா? தடுக்க முடிந்ததா? இல்லை.

ஆகையால் தமிழினம் தொடர்ந்து தங்கள் மண்ணில் வாழவேண்டுமானால் இன அழிப்பைத் தடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமை அவர்கள் கையிலேயே உள்ளது.

தன்கையே தனக்கு உதவி. ஒவ்வொருவரும் தமக்கு வாழ்வா சாவா என்ற நிலை வரும்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முற்படுவது இயற்கை. தானாகவே வரும் தற்காப்பு உணர்வு அது.

குடாநாட்டுப் பொதுமக்களைப் பொறுத்த வரையில் இப்போது இறுதிக் கட்டம் ஒன்று வந்திருக்கிறது.

தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள அவர்கள் தாமாகவே தயாராக வேண்டும். ஆயுதம் கொண்டு போராடும் படையிடமிருந்து தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்த வேண்டிய வரலாற்றுத் தேவை, வேறெந்தக் காலத்தையும் விட இப்போது பெரிய அளவில் ஏற்பட்டிருக்கிறது.

இராணுவத்தின் எறிகணை வீச்சு, குண்டு வீச்சுக்கு மக்கள் இரையாகிக் கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறு சாவதை விட எதிரி எமது பகுதியைத் தாக்கவிடாமல் போராடிச் சாவது மேல் என்ற எண்ணம் பிறக்க வேண்டும்.

தங்கள் இளமைச் சக்தியினால் எதிரியின் படையெடுப்பைத் தடுக்க முடியும் என்ற மன உறுதி இளைஞர்களுக்கு வர வேண்டும்.

இப்போது பெரிய போர் ஒன்று நடக்கிறது என்பதனை உணர வேண்டும். அந்தப் போரினால் ஏற்படும் அழிவைத் தடுத்தாலே எதிர்காலச் சந்ததியினரான தங்களுக்கு வாழ்வுண்டு என்பதனை உணர வேண்டும்.

போர்க்களத்துக்கு ஆயுதம் ஏந்திச் செல்பவர்கள் எல்லாம் இறந்து விடுவதில்லை. எனவே வீரத்துடன் ஆயுதம் ஏந்திப் போராடுவது தமது கடமை, தமக்குள்ள பொறுப்பு என்பதனை உணர்ந்து இளைஞர்கள் அதற்கு முன்வரவேண்டும்.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

படைகளை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் ஆட்பலத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள் வீட்டுக்கு ஓர் இளைஞன் அல்லது யுவதியை போராட்ட அணியில் மனமுவந்து இணைக்க முன்வர வேண்டும்.

# வீரச்சாவு நிகழ்வும் வித்துடல் விதைப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 23

நேற்று வலிகாமம் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை சிலம்பரசி (குமரகுரு மாலினி — ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)யின் வித்துடல் இன்று பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு, வல்வெட்டித்துறை ச.ச. நிலையத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற பின்னர் வித்துடல் அணிவகுப்பு மரியாதையுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு சகல இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும். (இ)

# எரிபொருள் நிரப்புவதற்கு நீண்ட 'கியூ'வில் வாகனங்கள்

கொழும்பு, ஒக் 23

கொழும்பு மற்றும் தென்பகுதியின் ஏனைய நகரங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்னால் நேற்று நீண்ட 'கியூ'வில் வாகனங்கள் நின்றன.

வாகனங்களுக்கு குறிப்பிட்ட அளவு எரிபொருளே வழங்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க, எரிபொருளுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

டீசல் பெற்றோல், மண்எண்ணெய் ஆகியன போதியளவு இருப்பில் இருக்கின்றன என்றும் அவற்றை விநியோகிப்பதில் மாத்திரம் தாமதம் இருக்கிறது என்றும் இன்னும் இரண்டு தினங்களுக்கும் நிலைமை வழமைக்குத் திரும்பி விடும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி எரிபொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-ஏ)

### எண்ணெய்க் குதங்கள் எரிவதால்

# சூழல் பெரிதும் மாசடைந்து நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு ஒக். 23

கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் எரிவதால் சூழல் மாசடையும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இதன் காரணமாக சூழலில் நோய்க்கிருமிகள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகளும், பல்வேறு நோய்கள் தோன்றக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறும்—

அதற்காக நாட்டில் உள்ள சகல வைத்தியசாலைகளையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறும்—

சுகாதார சேவைகள் அமைச்சர் ஏ. ஏச். எம். பௌஸி அறிவித்துள்ளார். [ஒ-ஏ]

# எதிர்காலத்தில் தகவலும் அறிவும் மிக முக்கியம்

### கல்லூரி தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 23

''எதிர்காலத்தில் தகவலும் அறிவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும் என்பது திண்ணம் தகவலும் அறிவும் உடையவர்கள் நல்ல நிலை பெறுவார்கள் தகவலைப் பிரயோகித்து பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் எல்லாவற்றுக்கும் மேலானதாகக் கருதப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரியின் கல்லூரி தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. தர்மரத்தினம் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்ச்சி கடந்த மாதம் 23 ஆம் திகதி முன்னாள் பேராயர் அதி வண. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் தர்மரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எம்மிடம் உள்ள தொழில்நுட்பங்களை பூரணமாகப் பயன்படுத்த உதவும் கல்வி, பயிற்சி ஆகியவற்றின் மூலம் தான் நாம் மேலும் மேலும் கூடுதலான அறிவைப் பெற முடியும்.

மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் வழங்கி வாழ்க்கைக்குப் பயனுள்ள சான்றிதழ்களை வழங்கும் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரி மேலும் விருத்தி அடைந்து எமது பிரதேசத்தின் பொருளாதார விஸ்தரிப்பில் முக்கிய பாத்திரம் வகிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

தொழில்நுட்பக் கல்லூரியில் படித்து முடித்தவர்களுக்கான வெகுமதிகள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் ஆகியன இந்நிகழ்வில் வழங்கப்பட்டன. (ச)

### பாதிப்புக்களை பதியுமாறு அறிவுறுத்து

வலி மேற்கு ஒக். 23

வலி.மேற்கில் கடந்த வார ஆரம்பத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இறந்த காயமடைந்தவர்களின் விபரம் சேதமடைந்த வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் விபரங்களை அவ்வப்பகுதி கிராம உத்தியோகத்தர்களிடம் உடனே தெரியப்படுத்துமாறு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-175)

### சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

மட்டுவில் தெற்கு சாரதா நாயகி வித்தியாலய முன்னாள் அதிபர் திரு வே. சண்முகநாதனின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபையும், நலன் விரும்பிகளும் இதற்கு ஒழுங்கு செய்திருந்தனர். (ச)

### கொழும்பு நகரில் மட்டுமன்றி

# காலி, பேருவளையிலும் "கறுப்பு மழை" பெய்தது!

கொழும்பு ஒக். 23

எண்ணெய்க் குதங்கள் எரிவதால் வெளிவந்த புகை மண்டலமும், அனல் காற்றும் கொழும்பில் காலநிலையில் பெரும்மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் முதல் நகரின் பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து கொண்டிருக்கிறது.

இந்த மழையுடன் புகை மண்டலமும் கலந்து ''கறுப்பு மழை'' யாக சில இடங்களில் மழை பெய்தது.

காலி, பேருவளை தர்காநகர் நாடாளுமன்றப் பகுதி ஆகிய பகுதிகளில் இத்தகைய ''கறுப்பு மழை'' பெய்தது.

மழையில் நனைந்தவர்கள் பலரது உடைகளில் கறுப்பு நிறம் ஒட்டிக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

காலி நகரைச் சேர்ந்த கட்டுகொட பகுதியில் இந்த ''கரும்மழை'' தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. [ஒ-ஏ]

### வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில்

# கால்நடை கட்டுப்பாட்டு குழுக்கள் அங்குரார்ப்பணம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கால்நடை கட்டுப்பாட்டுக் குழு அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வயல் நிலங்களில் கால்நடைகள் கட்டாக்காலியாக அலைந்து திரிகின்றன.

கால் நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கே இந்தக் குழுக்கள் அங்குரார்ப்பணம்செய்யப்படுகின்றன.

இந்தக் குழுக்களின் தலைவராக உற்பத்திக் குழுக்களின் தலைவர் செயற்படுவார். உறுப்பினர்களாக இரண்டு கமக்காரர்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் ஒருவர் தெரிவு செய்யப்படுவர் மொத்தம் ஐந்து பேரைக் கொண்டு இந்தக்குழு இயங்கவுள்ளது. (ஒ-175)

### ஓய்வூதியர்கள் நலன் கருதி

# இலங்கை வங்கிக் கிளைகளில் கூடுதல் கரும பீடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 23

ஓய்வூதியர்களின் பென்சன் வவுச்சர்களை பணமாக மாற்றிக் கொடுப்பதில் தற்போது இருக்கும் தாமதத்தை குறைப்பதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் கூடுதல் கரும

### சிவில் பாதுகாப்பு படை

கொழும்பு, ஒக். 23

சிவில் பாதுகாப்பு படை ஒன்றை அரசு அமைக்கவிருக்கிறது.

இந்தப் படை பொலீஸாருடன் இணைந்து செயல்படும் என்றும் —

இதன் காரணமாக இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முழுக் கவனமும் செலுத்த முடியும் என்றும்— அரசு தெரிவித்துள்ளது. (இ-3)

பீடங்கள் [கவுண்டர்கள்] பயன்படுத்தப் பட இருக்கின்றன.

அடுத்த மாதத்தில் இருந்து இதனை நடைமுறைக்குக் கொண்டுவர இருப்பதாக இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் யாழ். மாவட்ட அரச, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். பத்மநாதன்—

ஓய்வூதியர்கள் இலங்கை வங்கிக் கிளைகளில் வவுச்சர்களை மாற்றிக் கொள்வதற்கு நீண்ட நேரம் 'கியூ'வில் காத்திருக்கும் நிலையை சுட்டிக் காட்டினார்.

அப்போதே மேற்குறிப்பிட்ட புதிய நடைமுறை அடுத்த மாதத்தில் இருந்து அமுல் படுத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. [ஒ-4]

### திருநெல்வேலியில்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இடத்தைச் சேர்ந்த சின்னராசாசரோஜா (வயது 23) என்பவரே மரணமானவராவார். வீட்டின் இடிபாடுகளுக்குள் இருந்து இவரது சடலம் மீட்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இறந்தவரின் வளர்ப்புத் தாயாரும், பேர்த்தியாருமான நாகலிங்கம் சீதேவி [வயது 60], அவரது மகள் தங்கராசா புனிதமணி [வயது 40] ஆகியோரும் ஏழாலையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களான தேவராசா வனிதா (வயது 29), இவரது மகள் தேவராசா சுரேகா [வயது 9], திருஞான செல்வம் சசிகலா [வயது 10] மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சண்முகம் [வயது 67] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்விடத்தில் அடுத்தடுத்து மூன்று ஷெல்கள் விழுந்து வெடித்தன. [இ-15]

# திருநெல்வேலி ஷெல்லினால் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 23

பலாலியில் இருந்து நேற்று முன்தினமிரவு திருநெல்வேலிப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார்.

திருநெல்வேலி விவசாயப் பண்ணைப் பகுதியில் ஷெல் விழுந்து வெடித்த போது பாதுகாப்புத் தேடி பதுங்கு குழி நோக்கி ஓடிய இராசேஸ்வரன் கலைச்செல்வி (வயது 33) என்ற பெண்ணே தலையில் காயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் திரிபுரியம்மா

பன்னாலையைச் சேர்ந்த சின்னத்தம்பு இரத்தினத்தின் அன்பு மனைவி திரிபுரியம்மா (22-10-95) பி.ப. 1.30 மணியளவில் காலமானார்.

இவர் மானார்- திருமதி அன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், றாஜினி (சுவிஸ்), யஜோதினி, ஜெயன், றஜனி ஆகியோரின் பாசமிகு தயாரும், உருத்திராடம்மா (செல்லம்மா), பத்மாவதி, பத்மநாதன், துரைசிங்கம், கோபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்' நகுலேஸ்வரனின் (சுவிஸ்) அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-10-95) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கைதடியில் நடைபெறும்.

தகவல்:
சி. இரத்தினம்
(கணவன்)

நவீனடி பாடசாலை ஒழுங்கை,
கைதடி.
(39114)

## ஆறுமுகம் வைத்திலிங்கம் நடராஜா (A.V N)

(இளைப்பாறிய ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி, கந்தரோடை - சுன்னாகம்)

வைத்திலிங்கம் நடராஜா நேற்று (22-10-1995) காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், இராமநாதன் சுசீலா (யாழ். போதனா வைத்தியசாலை தலைமைத் தாதி), பாலசிங்கம் ரேவதி (தட்டெழுத்தாளர் வவுனியாநீர்ப்பாசன இலாகா), Dr. திருமதி இராஜரட்ணம் கௌசல்யா (கண்டி போதனா வைத்தியசாலை), ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. இராமநாதன் (நில அளவையாளர், கொழும்பு), சு. பாலசிங்கம் (வவுனியா), Dr. க. இராஜரட்ணம் (கண்டி போதனா வைத்தியசாலை), ஆகியோரின் அன்பு மாமனாரும், வை. இராசையா J P (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், தெல்லிப்பழை), வை நவராசா (இளைப்பாறிய தபால் அதிபர்), வை ஸ்கந்தவரதன் (இ.போ.ச. ரோண்டாவில் பஸ் நடத்துநர்), வை குகானந்தராசா (இளைப்பாறிய உத்தியோகத்தர்விவசாயதிணைக்களம், திருநெல்வேலி), திருமதி க. செல்வரஞ்சினிதேவி (உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இ. கணேஸ்வரன் (செயலாளர், வலிகாமம் தென் - மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்), பொ. செல்வராஜா (Radio grapher London), த. தம்பிராஜா (கொக்குவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சேதீஸ் [யாழ். இந்துக்கல்லூரி], தவேஷன் (உடுவில் மகளிர் கல்லூரி), சாளினி, சஜானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் "பிருந்தாவனம்" நாகம்மாள் கோவில் வீதி இல்லத்தில் இன்று (23-10-1995) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராமநாதன் சுசீலா
(யாழ் போதனா வைத்தியசாலை)
(மகள்)

நாகம்மாள் கோவில் வீதி,
மருதனார்மடம்.
(39113)

## திருமதி துரையம்மா இராசையா

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி துரையம்மா இராசையா நேற்று (22-10-95) காலமாகிவிட்டார்.

இவர் இராசையாவின் அன்பு மனைவியும், மகாதேவா (கனடா), துரைராசா (பிரதேச சபை, காங்கேசன்துறை), தெய்வேந்திரம், பாலச்சந்திரன் (சுங்க இலாகா, கொழும்பு), காலஞ்சென்ற இராசேந்திரம், மற்றும் இந்திராணி, மலிகா (அழகுராணி, கனடா), இந்திரராசா (பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நல்லூர்) ஆகியோரின் தாயாரும், பாக்கியலக்ஷ்மி, இராசலக்ஷ்மி, அன்னம்மா, சிவசோதிநாதன் (மாவீரர் போராளிகள் குடுபநலன் காப்பகம்), சற்குணநாயகி, சிவானந்தம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், ரூபி (கனடா), ரூபன் (கனடா), ரஜனி (ஜேர்மனி), ரஜீவன் (ஜேர்மனி) ரஜிதா, சுதன், மதன் (போராளி), ஜெகன் (போராளி), நீலன், அருண் (கனடா), ஆரபி (கனடா), தீபன், தீபா, நிரேசன், நிவேதன், தர்சிகா, தர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-10-95) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யபபடும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. இந்திரராசா
(மகன்)

துரையம்மா இல்லம்,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
[39119]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இல் உள்ள அச்சகத்தில் 23-10-95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கு நாடே கடமைப்பட்டுள்ளதாம்!

## சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, ஒக் 23

தற்போதைய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு நாடே கடமைப்பட்டுள்ளது.

இப்படிக்கூறுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நாட்டு மக்களுக்கு அவர் ரூபவாஹினி மூலம் விடுத்த செய்தியில் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் பற்றி முழுமையாக நாம் அறிந்திருந்த போதும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

யாழ். குடாநாட்டில் அப்போது நிலவிய யதார்த்த நிலையை புரிந்து கொண்டதினாலேயே இந்தப் பேச்சுகள் ஆரம்பமாகின.

சமாதானத்தை தேடும் முயற்சியில் எவ்வளவோ நியாயமாக நாம்நடந்த போதிலும் எம் மீது யுத்தம் ஒன்றைத் திணித்தபோது பொறுப்பான ஓர் அரசாங்கம் என்ற வகையில் பதில் நடவடிக்கை எடுக்காமல் எம்மால் இருக்கமுடியாது.

இந்த நோக்கம், பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில்தான் தற்போது எமது இராணுவத்தினர் சூரிய பிரகாச இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மோதலில் ஈடுபட்டுள்ள படையினருக்கு நாடே கடமைப்பட்டுள்ளது.

நகரங்களில் மக்கள் உல்லாச வாழ்க்கை வாழும் போது படையினர் யுத்த முனையில் படும் கஷ்டம் எனக்குத் தெரியும்.

விரைவில் சமாதானம் ஏற்படும் என நம்புகின்றேன்.

இந்த யுத்தம் சமாதானத்துக்கான தடைகளை அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படுகிறதே தவிர எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல.

இப்படி அவர் கூறினார்.
(இ-3)

## கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 23

கொழும்பில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச விமானநிலையம் ரயில் நிலையம், முக்கிய கட்டடங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலைநகரில் அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(இ-3)

# 5 நாள் சண்டையில் 102 படையினர் பலி

ஆறாவது நாளாக தொடரும் சூரியப்பிரகாச இராணுவ நடவடிக்கையில் கடந்த 5 நாட்களில் மட்டும் அரச தகவலின்படி 102 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 500க்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

முதலாம் நாள் மோதலில் 39 படையினரும்—

2 ஆம் நாள், 3 ஆம் நாள் மோதல்களில் தலா 20 படையினரும்—

4 ஆம் நாள் மோதலில் 9 படையினரும்— கொல்லப்பட்டனர் என்று அரசு தெரிவித்தது.

5 ஆம் நாள் மோதலில் 14 படையினர் கொல்லப்பட்டனர்.
(இ-3)

## மட்டுவிலில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயத்திற்குள்ளானார்.

மற்றும் மட்டுவிலைச் சேர்ந்த நல்லையா பஞ்சரத்தினேஸ்வரி (வயது 26) என்பவர் சிறு காயத்துக்குள்ளானார். இவர்களும் சிகிச்சை பெற்றனர்.

சுன்னாகத்திலிருந்து இடம் பெயர்ந்து இங்கு தங்கியுள்ள என். குலசிங்கம் என்பவரது ஆடு ஷெல் சிதறல் காரணமாக வயிறு பிளந்த நிலையில் இறந்தது.

இங்கு கோப்பாய் நீர்வேலி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களே பெருமளவில் தங்கி இருந்தனர்.

நேற்றைய ஷெல் தாக்குதல் காரணமாக இவர்களில் சிலர் வேறு இடங்களுக்குச் சென்றனர்.
(இ-15-31)

## ஷெல்லுக்கு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றது.

இருபாலையில் இருந்து வெளியேறி சைக்கிளில் வந்து கொண்டிருந்த சிறுமி ஒருவர் சைக்கிள், வான் ஒன்றுடன் மோதியதில் காயமடைந்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த இராமலிங்கம் வனமதி (வயது 13) என்ற சிறுமியே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
(இ-15)

## ஆயிரக்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

கைதடி வெளிப்பகுதியிலேயே அதிகளவு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் கோப்பாய் — கைதடி பாலத்தில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் சென்றோ தென்மராட்சிக்குச் சென்றனர்.

வெளியேறிய மக்கள் பலர் முத்திரைச்சந்திப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரை வீதியோர மரநிழல்களில் நேற்று கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர்.
(இ-15)

## அச்செழுவில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரைத் தடுத்து விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

காலை 8 மணியில் இருந்து இடம்பெற்ற இம் மோதலின் போது படையினர் சுற்றுப் புறப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை நடத்தினர்.

நீர்வேலி, கோப்பாய், திருநெல்வேலி, இருபாலை, கோப்பாய் கிழக்கு வயல் பகுதிகளை நோக்கியே பெரும்பாலான ஷெல்கள் ஏவப்பட்டன.

ஷெல்கள் தொடர்ந்து பயங்கர சத்தத்துடன் வெடித்ததில் [illegible] பகுதிகளும் [illegible].
(இ-3-15)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தம்பு

(ஓய்வுபெற்ற ஓவசியர்)

வேலுப்பிள்ளை தம்பு நேற்றுக் காலமானார். இவர் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த குலரத்தினத்தின் அன்புக் கணவரும், குணபூபதி, இரத்தினபூபதி, இரத்தினகோபால், சத்தியபூபதி, ஜெயபூபதி, பாலபூபதி, சிவபூபதி ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சூரியகுமார், உஷா, சண்முகரட்னம், சதானந்தன், ஜெயசிந்தன், அரசகுலநாதன் ஆகியோரின் மாமனாரும், தக்ஷாயினி, துளசி, அபிராமி, பிரசாந், ஆரணி, சாயி, தமிழரசி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (23-10-95) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குணபூபதி சிவப்பிரகாசம்
[மகள்]

கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
(39118)


# பெற்றோர்களே!

இன்றைய மழலைச்செல்வங்கள் நாட்டின் நாளைய மக்கள் சந்ததியினர்.

அவர்கள் ஊனமடையாது தடுத்து அவர்களின் வாழ்க்கையை வளமாக்குங்கள்-

அவர்கள் ஊனமடைவதைத் தடுக்க போலியோ தடுப்பு மருந்து வழங்குங்கள்.

# அதற்கான நாள் நவம்பர் - 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org